**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-24** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : S.ஜெகமணி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 13th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

முதல் விசாரணை

நான் தற்போது கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தேர்தல் பிரிவு துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 01.02.2021 அன்று கரூர் மாவட்டம், புகளூர் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து

வந்தபோது, புஞ்சைபுகளூர் வடக்கு கிராமம், க.எண். B14, அண்ணாநகர், முதல்தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு.கிரி (எ) கிரிதரன், த/பெ.ரெங்கசாமி என்பவர் இந்து, வேட்டுவகவுண்டர் வகுப்பைச்சேர்ந்தவர் என சாதிச்சான்றிதழ் வழங்கினேன். அது அ.சா.ஆ.16

கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், புஞ்சைபுகளூர் வடக்கு கிராமம், க.எண். 70, மலைக்காவலன் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு.கோகுல்நாத், த/பெ. சசிக்குமார் என்பவர் இந்து, சோழியவெள்ளாளர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர் என சாதிச்சான்றிதழ் வழங்கினேன். அது அ.சா.ஆ.17

கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், புஞ்சைபுகளூர் வடக்கு கிராமம், க.எண். 12/7, செந்தூர் நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு.கலையரசன், த/பெ. செல்வம் என்பவர் இந்து, கம்மாளர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர் என சாதிச்சான்றிதழ் வழங்கினேன். அது அ.சா.ஆ.18.

கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், புஞ்சைபுகளூர் வடக்கு கிராமம், க.எண். 38/31, மாரியம்மன்கோவில் தெரு, மலைவீதி என்ற முகவரியில் வசிக்கும் திரு.ஷேக்தாவூத், த/பெ. மஸ்லான் என்பவர் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் வகுப்பைச்சேர்ந்தவர் என சாதிச்சான்றிதழ் வழங்கினேன். அது அ.சா.ஆ.19.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் எதன் அடிப்படையில் சாதிச்சான்றிதழ்கள் வழங்கினேன் என்றால் மேற்படி நபர்களின் பெற்றோர்களின் சாதிச்சான்றிதழ்கள் மற்றும் பள்ளிச்சான்றிதழ்களின் அடிப்படையில் சாதிச்சான்றிதழ்கள் வழங்கினேன். நான் நேரடியாக சென்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோளின் அடிப்படையில், கிராம நிர்வாக அதிகாரி, வருவாய் ஆய்வாளர் கொடுத்த அறிக்கைகளின் அடிப்படையில் நான் சாதிச்சான்றிதழ்கள்

வழங்கினேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார் என்றால் இல்லை. DSP விசாரித்தார். நான் ஆவணங்களை பரிசீலிக்கவில்லை என்றும், நேரடியாக விசாரிக்கவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாதிச்சான்றிதழ்கள் வழங்கினேன் என்றால் சரியல்ல. எனது வேண்டுகோள் கடிதத்தை என்னை விசாரித்த காவல்துணை கண்காணிப்பாளரிடம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**6 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பள்ளி ஆவணங்களை பார்த்து சாதிச்சான்றிதழ்கள் வழங்கினேன் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-25** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : அனீஸ்சத்தார் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 13th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 19.04.2021 அன்று மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டாட்சியராக பணிபுரிந்தபோது, மணிகண்டன் (எ) கூல்மணி,

த/பெ. முனீஸ்வரன், நெ.32/1, கேட்லாக் ரோடு, ராஜீவ்காந்தி தெரு, தெப்பக்குளம், மதுரை - 9 என்பவர் இந்து, அகமுடையார் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர் என்றும்,

உதயநிதி (எ) சூர்யா, த/பெ. சத்தியமூர்த்தி, க.எண்.119, 2 வது பிளாக், திடீர்நகர், மதுரை என்ற முகவரியில் வசித்து வந்து, நெ.18/11, மீனாட்சி இல்லம், நிர்மலா பள்ளி எதிரில், தெப்பக்குளம், மதுரை - 9 என்ற முகவரியில் வசித்து வந்தவர் இந்து, மறவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர் என்றும்,

சீனிவாசன், த/பெ. சங்கர், 21/8, மேலனுப்பானடி, மதுரை என்பவர், இந்து, மறவர், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர் என்றும், சாதிச்சான்றிதழ் வழங்கினேன். அது அ.சா.ஆ.20.

இது சம்மந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் என்னை தொலைபேசி மூலம் விசாரித்தார்.

<u>**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் யார் வேண்டுகோளின் பேரில், சான்று வழங்கினேன் என்றால் கரூர், காவல்துணை கண்காணிப்பாளர் வேண்டுகோளின்படி, வழங்கினேன். வேண்டுகோள் எப்படி கொடுத்தார் என்றால் கடிதமாக கொடுத்தார். வேண்டுகோள் கடிதம் தேதி ஞாபகமில்லை. சீனு (எ) சீனிவாசன் என்பவர் இந்து, மறவர் சாதி என்று விசாரணையின் அடிப்படையில் வழங்கினேன். அவருக்கு சாதிச்சான்றிதழ் இல்லை என எனது அறிக்கையில் கூறியுள்ளேன். கிழக்கு மதுரை கிராமநிர்வாக அதிகாரியை விசாரித்ததில் அவருக்கு சாதிச்சான்றிதழ் இல்லை என தெரியவந்தது. சீனு (எ) சீனிவாசனுக்கு சாதிச்சான்றிதர் இல்லை என்பதால், அவரது உடன்பிறந்த தம்பியின் சாதிச்சான்றிதழை வைத்து அ.சா.ஆ.20 சாதிச்சான்றிதழ் வழங்கினேன். சீனிவாசன் என்பவருக்கு சாதிச்சான்றிதழ் உள்ளது என்றும், அதுகுறித்து நான் சரியாக விசாரிக்காமல், அ.சா.ஆ.20 ஐ வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

என்னை கரூர், காவல்துணை கண்காணிப்பாளர் தொலைபேசி மூலம் விசாரித்தார். நான் ஆவணங்களை பரிசீலிக்காமல், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அ.சா.ஆ.20 சாதிச்சான்றிதழை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**(Chapter XXIII Code of Criminal Procedure)**</u>

<u>**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**</u>

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-26** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 13th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருச்சிராப்பள்ளி, வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டல் வழங்கல் அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 04.02.2021 அன்று திருச்சி மேற்கு வருவாய் வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தபோது,

வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்திலிருந்து கேட்டுக்கொண்டதின்பேரில், நான் விசாரணை செய்து, ரஞ்சித்குமார், த/பெ. ரமேஷ் என்பவர் இந்து, பள்ளர், பட்டியல் வகுப்பைச்சேர்ந்தவர் என சான்று வழங்கினேன். அந்த சாதிச்சான்றிதழ் அ.சா.ஆ.21.

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னை வேலாயுதம்பாளையம் போலீசார் விசாரித்தார்கள். நான் ஆவணங்களை பரிசீலிக்காமல், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**(Chapter XXIII Code of Criminal Procedure)**</u>

<u>**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**</u>

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-27** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சண்முகானந்தவடிவேல் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 13th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது உதவி ஆய்வாளராக தாந்தோணிமலை காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 18.12.2020 அன்று காலை 7.00 மணியளவில் வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் .......

அலுவலில் இருந்தபோது, வேலாயுதம்பாளையம் கா.நி.கு.எண். 778/2020 ச/பி. 147, 148, 302 இதச வழக்கில், இறந்துபோன ரஞ்சித்குமாரின் பிரேதத்தை பிரேதபரிசோதனை அலுவல் நியமனம் செய்யப்பட்டு, காவல் ஆய்வாளருடன் கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். அன்றைய தினம் 9.15 முதல் 11.15 மணி வரை பிரேத விசாரணைக்காக ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். பின்னர் 11.30 மணிக்கு ஆய்வாளரிடமிருந்து கடவுச்சீட்டு பெற்றுக்கொண்டு, மருத்துவரிடம் பிரேத பரிசோதனை செய்வதற்கான கடிதத்தை ஒப்படைத்தேன். ரஞ்சித்குமாரின் பிரேதத்தை மருத்துவருக்கு அடையாளம் காட்டி, பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தேன். பின்னர் பிரேத பரிசோதனை முடிந்தபின்னர், பிரேதத்தை இறந்துபோனவரின் அப்பாவிடம் ஒப்படைத்து, கையெழுத்து பெற்றேன்.

பிரேத பரிசோதனையின்போது, பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட இரத்தக்கறை படிந்த முண்டாபனியன் ஒன்று, புளூ, கருநீலம் கலந்த பெர்மாஸ் டிராயர் ஒன்று அதில் இடுப்பு பகுதியில் எலாஷ்டிக் வைக்கப்பட்டுள்ளது, இரத்தக்கறை முழுவதும் படிந்த சந்தன நிற முழுக்கை சட்டை ஒன்று ஆகியவற்றை காயவைத்து, சிறப்பு அறிக்கையுடன் 19ம் தேதி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். நான் ஒப்படைத்த சிறப்பு அறிக்கை அ.சா.ஆ.22. நான் ஆய்வாளரிடம் ஒப்படைத்த இரத்தக்கறை படிந்த முண்டாபனியன் ஒன்று சா.பொ.10, புளூ, கருநீலம் கலந்த பெர்மாஸ் டிராயர் ஒன்று சா.பொ.11, இரத்தக்கறை முழுவதும் படிந்த சந்தன நிற முழுக்கை சட்டை ஒன்று சா.பொ.12.

பிரேத பரிசோதனையின்போது, பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளையும், உடைமைகளையும், இரத்த மாதிரிகளையும், திருச்சி தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன்.

<u>**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்துபோன ரஞ்சித்குமாரை எனக்கு சம்பவத்திற்கு முன்னர் தெரியாது. பிணவறையில் இருந்த பிரேதம் ரஞ்சித்குமாருடையது என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் பிரேத விசாரணையின்போது நான் உடனிருந்தேன். பிரேத விசாரணையின்போது, அங்க மச்ச அடையாளங்களை பார்க்கும்போதும், நான் உடனிருந்தேன். பிரேதத்தை பிணவறையில் யார் ஒப்படைத்தது என்று ஞாபகமில்லை. பிரேதத்தை ஆம்புலன்சில் ஏற்றும்போது நான் சம்பவ இடத்தில் இல்லை. பிரேத விசாரணையின்போது, பஞ்சாயத்தார்கள், சாட்சிகள் இருந்தார்கள். பிரேதத்திலிருந்த உடைகள் ஈரமாக இருந்ததால், அவைகளை எடுத்துச்சென்று காவல்நிலையத்தில் காய வைத்து ஒப்படைத்தேன்.

<u>**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

<u>**மறு விசாரணை**</u>

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-28** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சுப்பிரமணி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 13th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், பரமத்தி காவல்நிலையத்தில் தனிப்பிரிவில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் சம்பவ சமயத்தில் வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக

பணிபுரிந்தேன். வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் CCTNS ல் ஆப்ரேட்டராக பணி செய்தேன். 17.12.2020 அன்று உதவி ஆய்வாளர் திரு.அருள்செல்வன் என்பவர் கொடுத்த புகார் மனுவிற்கு, கு.எண். 778/2020 என்ற முதல் தகவல் அறிக்கையை கணிணியில் பதிவு செய்தேன். 18.12.2020 அன்று ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு சென்றபோது, அவருடன் சென்று, ஆய்வாளர் மடிக்கணிணியில் அவர் சொல்ல சொல்ல பதிவு செய்தேன். ஆய்வாளர் சாட்சிகளை விசாரித்தபோது, ஆய்வாளர் சொல்ல சொல்ல கணிணியில் பதிவு செய்தேன். 19.12.2020 அன்று கைது செய்த ஐந்து எதிரிகளையும் விசாரித்தபோது, ஒப்புதல் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். 21.12.2020 அன்று ஒரு எதிரியை கைது செய்து, விசாரித்தபோது, அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். 22.12.2020 அன்று இரண்டு எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். 18.02.2021 அன்று நீதிமன்றக்காவலிலிருந்து போலீஸ்காவலுக்கு எடுத்து வந்த ஒரு எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். நான் கணிணியில்ப திவு செய்ததை பிரிண்ட் எடுத்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக 11.05.2021 அன்று காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

17.12.2020 அன்று சம்பவ இடத்திற்கு மாலை 5.00 மணிக்கு சென்றேன். யார், யாருடன் சென்றேன் என்றால் போலீசார் வந்தார்கள். அவர்கள் யாரென்று ஞாபகமில்லை. சம்பவம் நடந்தபோது நான் காவல்நிலையத்தில் இருந்தேன். சம்பவம் பற்றி யார் காவல்நிலையத்திற்கு தகவல் கொடுத்தார்கள் என்றால் காவல்நிலையத்திலிருந்து என் செல்போனுக்கு போன் செய்து எனக்கு சொன்னார்கள். நான் காவல்நிலையத்தில் கணிணியில் தட்டச்சு செய்துக்கொண்டிருந்தபோது, காவல்நிலையத்திலிருந்த போன் மூலம் என் .........

செல்போனுக்கு போன் செய்து, சம்பவம் பற்றி சொன்னார்கள். சம்பவ இடத்திலிருந்து பிரேதத்தை ஆம்புலன்சில் ஏற்றிச்சென்று, மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒப்படைத்தேன். எத்தனை மணிக்கு ஒப்படைத்தேன் என்றால் நேரம் சரியாக தெரியவில்லை. அதன்பிறகு, ஒருமணி நேரம் கழித்து காவல்நிலையம் சென்றேன். இரவு 7.30 மணிக்கு நான் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்தேன். அதன்பிறகு, ஒருமணி நேரம் கழித்து நான் காவல்நிலையத்திற்கு வந்தேன். அதன்பிறகுதான் புகார்தாரர் வந்தாரா என்றால் புகார்தாரர் உதவி ஆய்வாளரிடம் புகார் கொடுத்தார். புகார்தாரர் என்னிடம் புகார் கொடுக்கவில்லை. புகார்தாரர் நான் காவல்நிலையத்திற்கு செல்வதற்கு முன்னர் புகார் கொடுத்தாரா அல்லது அதற்கு பின்னர் புகார் கொடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியாது. முதல் தகவல் அறிக்கையை கணிணியில் எத்தனை மணிக்கு பதிவேற்றம் செய்தேன் என்றால் இரவு 10.15 மணிக்கு செய்தேன். நான் கணிணியில் பதிவேற்றம் செய்தபோது, புகார்தாரர் ரமேஷ் அங்கிருந்தாரா என்றால் புகார்தாரரை எனக்கு சரியாக அடையாளம் தெரியாது. அங்கு காவல்நிலையத்தில் 10 பேர் இருந்தார்கள். அவர்களில் யார் புகார்தாரர் என்று எனக்கு தெரியாது. நான் 10.15 மணிக்கு முதல் தகவல் அறிக்கையை பிரிண்ட் எடுத்து, உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். என்னை காவல்துணை கண்காணிப்பாளர் விசாரித்தபோது, காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு போன் வந்தது என்பது குறித்து என்னிடம் விசாரிக்கவில்லை. 5.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றபோது, என்னுடன் ஆய்வாளர் வந்தாரா என்றால் போலீசார் இருந்தார்கள், ஆய்வாளர் இருந்தாரா என்று ஞாபகமில்லை. ஆய்வாளருக்கு நான் சம்பவம் பற்றி கூறவில்லை. ஆய்வாளருக்கு சம்பவம் பற்றி அப்போது தெரியுமா என்று எனக்கு தெரியவில்லை. ஆய்வாளருடைய மடிக்கணிணியில் தட்டச்சு செய்தேன். சம்பவத்திற்கு மறுநாள் வாக்குமூலங்களை ஆய்வாளரின் மடிக்கணிணியில் பதிவு செய்தேன். நான் சொன்னபடி, சொன்ன

நேரத்தில் சாட்சிகளின் வாக்குமூலங்கள், எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்கள் ஆய்வாளர் விசாரித்து, அவர் சொல்ல சொல்ல நான் மடிக்கணிணியில் தட்டச்சு செய்யவில்லை என்றால் சரியல்ல. அனைத்து எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களும் காவல்நிலையத்தில் வைத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. 19ம் தேதி கைது செய்யப்பட்ட ஐந்து எதிரிகளை கைது செய்த இடத்திலேயே ஒப்புதல் வாக்குமூலங்களை தட்டச்சு செய்தேன். 21ம் தேதி கைது செய்யப்பட்ட ஒரு எதிரியின் வாக்குமூலத்தை தோட்டக்குறிச்சி மலையம்மன் கோவில் அருகில் வைத்து தட்டச்சு செய்தேன். 18.02.2021 அன்று போலீஸ் காவலில் இருந்த எதிரியின் வாக்குமூலத்தை காவல்நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்தேன். 18ம் தேதி எத்தனை எதிரி போலீஸ் காவலுக்கு எடுத்தனர் என்றால் சூர்யா (எ) உதயநிதி என்ற ஒரு எதிரியை போலீஸ் காவலில் எடுத்தனர். 23.12.2020 அன்று எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி, சீனிவாசன் ஆகியோரின் வாக்குமூலங்கள் காவல்நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்தேன் என்றால் சரியல்ல. அந்த தோட்டக்குறிச்சி, மலையம்மன் கோவிலில் உள்ள மின்இணைப்பு பிளக்பாயிண்ட்டிலிருந்து பிரிண்ட் எடுத்தேன். சம்பவ இடத்தில் தட்டச்சு செய்தவைகளை அருகில் இருந்த டீக்கடையில் இருந்த மின்இணைப்பு பிளக்பாயிண்ட்டிலிருந்து பிரிண்ட் எடுத்தேன். காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது, பிரிண்ட் எடுத்து கொடுத்ததை பற்றி கேட்டாரா என்றால் கேட்டார். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் சொன்னபடி பிரிண்ட் எடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன இடத்தில் கணிணியிலிருந்து பிரிண்ட் எடுக்கும் வசதி கிடையாது என்றால் சரியல்ல. அனைத்து சாட்சிகளின் வாக்குமூலங்களையும், எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களையும் காவல்நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்து, பிரிண்ட் எடுத்தேன் என்றால் சரியல்ல. நான் ஆய்வாளருடன் சாட்சி விசாரணை செய்யும்போது உடன் செல்லவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.